**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Civil Procedure)**

<u>அசல் வழக்கு எண். **132/2022**</u>

மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருப்பெரும்புதூர் 2026 ம் ஆண்டு மார்ச் திங்கள் 6ம் நாள் வா.த.சா.1 (PW1) அவர்களுக்கு இந்நீதிமன்றத்தால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **பெயர்** | **:** | **லதா** | **வயது** | **:** | **51** |
| **த/பெ.** | | **விநாயகம்** | **தொழில்** | | **வியாபாரம்** |
| **கிராமம்** | | **மாங்காடு** | **தாலுக்கா** | | **சென்னை** |

<u>வா**.**த**.**சா**.1 (PW)** முதல் நிலை விசாரணை தொடர்ச்சி **:**</u>

நான் இவ்வழக்கின் வாதியாவேன். வாதி தரப்பு சாட்சி 1 ஆவேன். (சாட்சியின் அடையாளம் ஆதார் அடையாள அட்டையின் மூலம் உறுதி செய்யப்பட்டது.)

| **வ. எண்** | **Exhibits** | | **தேதி** | **ஆவணங்கள் விவரம்** | **அசல்/நகல்** |
|---|---|---|---|---|---|
| 1. | வா. த.சா.ஆ. 16 | **Ex.A-16** | 01.01.2012 | தருண் என்பவரின் பிறப்பு சான்றிதழ. | கணிணி நகல் |
| 2. | வா. த.சா.ஆ. 17 | **Ex.A-17** | 13.12.1989 | திருமண புகைப்படம் | அசல் |

குறுக்கு விசாரணை

1) நான் விநாயகத்தின் வாரிசு தாரராக என்னையும், கிஷோர் மற்றும் தருண் ஆகியோர்கள் விளம்புகை கோரி இவ்வழக்கு தாக்கல் செய்துள்ளேன். விநாயகத்தின் இறப்பு சான்றிதழில் மனைவியின் பெயர் 3ம் பிரதிவாதி ராஜேஸ்வரி அவர்களின் பெயர் குறிப்பிடப்பட்டிருந்ததால் எனது மனு நிராகரிக்கப்பட்டுவிட்டது. 3ம் பிரதிவாதி ராஜேஸ்வரி என்பவர் எனது கணவரின் இரண்டாவது மனைவி ஆவார். எனக்கும் விநாயகத்திற்கும் வேம்புளியம்மன் கோவில், விருகம்பாக்கத்தில் திருமுணம் நடைபெற்றது.

2) விநாயகத்திற்கும் ராஜேஸ்வரி ஆகியோருக்கு 4ம் பிரதிவாதியான தருண் என்பவர் மட்டும் குழந்தையாக பிறந்தார். நான் பிறப்பால் முஸ்லீம் மதத்தை சார்ந்தவர் அல்ல. என்னுடைய பெயர் லதா என்பது எனது தாய், தந்தையர் வைத்த பெயர் ஆகும். எனது கணவரின் பெயரில் சொத்துக்கள் உள்ளது. அது வாரிசுதாரர்கள் கிடைக்க அந்த மனுவை தாக்கல் செய்துள்ளேன்.

3) இவ்வழக்கில் 3 மற்றும் 4ம் பிரதிவாதிகள் தாக்கல் செய்துள்ள பதில் உரையை நான் படித்துபார்த்துள்ளேன். நான் கோரிய பரிகாரத்திற்கு தேவையான ஆவணங்கள் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யாததால் இவ்வழக்கு தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல. இவ்வழக்கில் 2ம் பிரதிவாதி கிஷோர் என்னுடைய மகன் ஆவார். வாதசாஆ 3 சாட்சியிடம் காண்பிக்கப்பட்டது. 21.01.2001 ம் தேதி நான் அடையாறு மகளிர் காவல் நிலையத்தில் எனது கணவருக்கு எதிராக புகார் அளித்திருந்தேன்.

4) எனக்கும் விநாயகத்திற்கும் திருமணம் நடைபெற்றதற்கான எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் வாதசாஆ 1 எனக்கும் விநாயகத்திற்கும் திருமணம் நடைபெற்றதற்கான ஒப்பந்தம் ஆகும். 2ம் பிரதிவாதி எனது மகன் 2006 ம் ஆண்டு பிறந்தார். நான் அடையாறு மகளிர் காவல் நிலையத்தில் அளித்த புகாரில் ஊரார் முன்பு எனது திருமணம் நடைபெற்றது என்று கூறியுள்ளேன். எனக்கும் விநாயகத்திற்கும் குழந்தை பிறக்காத காரணத்தினால் அவர் இரண்டாவது திருமணம் செய்துகொண்டார் என்று நான் அளித்த புகாரில் தெரிவித்துள்ளேன் என்றால் சரியதான். எனக்கும் இறந்துபோன விநாயகததிற்கும் முறையாக திருமணம் நடைபெற்றது என்பதற்கு முறையான ஆவணம் எதுவும் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யாததால் இவ்வழக்கு தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

**சாட்சி கையொப்பம் : Sd/. லதா.**

Typewritten by the Typist Open Court to my dictation and to my hearing read over and interpreted to the witness and acknowledged by him/her to be correct.

Sd/. P. Jagadeeswaran.
District Munsif,
Sriperumbudur.